## பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய வட்டாட்சியர் கைது

புகார்தாரர் திரு.சகாதேவன், செய்யானந்தல் கிராமம், சேத்துப்பட்டு தாலுகா, திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரின் தாத்தா அவருடைய 51 சென்ட் நிலத்தை அவருடைய வாரிசுகளான புகார்தாரரின் அம்மா, பெரியம்மா மற்றும் சித்திக்கு தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்த நிலத்தை, பட்டா பெயர் மாற்றம் செய்து தர வேண்டி கடந்த 06.02.2023ம் தேதியன்று இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். மேற்படி இடத்திற்கு கள ஆய்வு செய்து தர வேண்டி, வட்டாட்சியர் ரூ.25,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளார். புகார்தாரர் தன்னுடைய குடும்ப சூழ்நிலையை கூறி தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று வட்டாட்சியரிடம் கெஞ்சி கேட்டதின் பேரில் லஞ்ச பணத்தை ரூ.15,000/- மாக குறைத்துள்ளார். மேற்படி லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 14.02.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது ஆற்காடு தாலுகா, இராணிப்பேட்டை மாவட்ட தாசில்தார் திரு.சுரேஷ் லஞ்ச பணம் ரூ.15,000/-யை அவரது ஓட்டுநர் திரு.பார்த்திபன் என்பவர் மூலமாக புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.